**இனிமையான குழந்தைகளே! நீங்கள் ஆன்மிக வருமானத்தில் மிக-மிக கவனம் செலுத்த வேண்டும். தலை மீது விகர்மங்களின் சுமை அதிகம் உள்ளது. அதனால் நேரத்தை வீணாக்கக் கூடாது.**

கேள்வி: எந்தக் குழந்தைகளின் கவனம் ஆன்மிக வருமானத்தின் மீது இருக்குமோ, அவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்: அவர்கள் ஒரு போதும் மற்றவர்கள் பற்றிய வீண் பேச்சுகளில் தங்களின் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். சரீர நிர்வாகம் செய்து கொண்டே ஆன்மிக வருமானத்தில் நேரத்தை ஈடுபடுத்துவார்கள். அதிகாலை எழுந்து மிக-மிக அன்போடு பாபாவை நினைவு செய்வார்கள். நினைவினால் ஆத்மா பறந்து கொண்டே இருக்கும். 2. அவர்கள் தந்தைக்கு சமமாக இரக்கமனம் உள்ளவராகி தங்களின் மீதும் அனைவர் மீதும் இரக்கம் வைப்பார்கள். அனைவருக்கும் பாபாவின் அறிமுகம் கொடுப்பார்கள்.

பாடல்: தாயும் நீயே, தந்தையும் நீயே

ஓம் சாந்தி. குழந்தைகள் இந்த பாடலில் தாய்-தந்தையின் மகிமை கேட்டீர்கள். எப்படி ஒரு வீட்டில் குழந்தைகள் இருக்கின்றனர் என்றால் தாய்-தந்தை, தாத்தா இருக்கின்றனர் அல்லவா! தந்தை மூலமாக தாத்தாவிடம் இருந்து ஆஸ்தி கிடைக்கிறது. ஏனென்றால் தாத்தாவின் ஆஸ்தி பெரியவர் களின் ஆஸ்தி ஆகிறது. அதே போல் இதுவும் அனைத்திலும் பெரியதாகும். உலக மனிதர்களுக்கோ இது பற்றித் தெரியாது. குழந்தைகளுக்குத் தெரியும். தாயும் நீயே, தந்தையும் நீயே ஆக, இது தாத்தா பற்றிய வார்த்தைகள். ஆகவே அவரது அறிமுகம் கொடுக்க வேண்டும். முன்னிலையில், அல்லது சித்திரங்கள் மூலமாக, அல்லது புரொஜக்டர் மூலமாகவோ தாத்தாவின் அறிமுகம் கொடுக்க வேண்டியது மிக அவசியம். சரீர சம்மந்தமான தாத்தா சாகாரில் (ஸ்தூலமாக) இருக்கிறார். இப்போது உங்கள் புத்தியில் முதலில் யார் வந்தார்? தாத்தா. புரொஜக்டர் மூலம் நீங்கள் புரிய வைக்கலாம். அதிலும் வரிசைப்படி சித்திரங்களைக் காட்ட வேண்டும். முதல்-முதலில் பரமபிதா பரமாத்மாவைப் பற்றிய ஞானம் கொடுக்க வேண்டும். பரமபிதா பரமாத்மாவோடு உங்களுக்கு என்ன சம்மந்தம்? மேலும் பிரஜாபிதா பிரம்மாவோடு என்ன சம்மந்தம்? எனவே, முதலில் சிவனுடைய சித்திரத்தைக் காண்பிக்க வேண்டும். பிறகு எழுத்து மூலம் கண்காட்சியில் புரிய வைப்பார்கள், அல்லது மேகசின் கூட உருவாக்குகிறார்கள் என்றால் முதல்-முதலில் அறிமுகம் கொடுக்க வேண்டும். பகவான் வாக்கு என்று கீதையில் எழுதப் பட்டுள்ளது. ஆகவே முதலில் பகவானின் அறிமுகம் கொடுக்க வேண்டும். உங்கள் அனைவரின் புத்தி மேலே சென்று விட்டது. அனைவரிலும் உயர்ந்தவர் பரமபிதா பரமாத்மா நிராகார் சிவபாபா. பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கர், பிறகு இங்கே வருவீர்களானால் எப்படி வீட்டில் உள்ளது போல தாய்-தந்தை மற்றும் தாத்தா அமர்ந்துள்ளனர். அது எல்லைக்குட் பட்டது. இது எல்லையற்றது. சித்திரங்களுடன் அனைத்தும் எழுதப் பட்டிருக்க வேண்டும். வித்தியாசத்தையும் சொல்ல வேண்டும், அதாவது அநேக மனிதர்கள் ஹடயோகம் கற்பித்தே வந்துள்ளனர், ஒரு பரமாத்மா மட்டுமே இராஜயோகம் கற்பிக்கிறார். இதன் மூலம் முக்தி-ஜீவன்முக்தி கிடைத்துக் கொண்டிருக் கிறது. இங்கே இருப்பது ஒரு நிராகார் பரமபிதா

பரமாத்மா சிவபகவான் வாக்கினுடைய விஷயம். எப்படி லௌகிக் தாய்-தந்தை மற்றும் தாத்தா, என்பது குழந்தைகளின் புத்தியில் நினைவிருக்கிறது. அப்படியே தான் உங்களுடைய புத்தியிலும் உள்ளது. இவர் மட்டுமே பரலௌகிகம் அவர் லௌகிகம். உங்களுக்கு நிச்சயம் உள்ளது, இவர் சிவபாபா என்பதாக. நம்முடைய தந்தை என்றால் அவரை நினைவு செய்ய வேண்டும். ஆனால் குழந்தைகள் மறந்து விடுகின்றனர். நேரத்தை அதிகமாக வீணடிக்கின்றனர். நேரத்தை வீணாக்கக் கூடாது. ஏனென்றால் விகர்மங்களின் சுமை தலை மீது அதிகம் உள்ளது. ஆத்மா மீது கறை படிந்துள்ளது. ஆகவே பரமாத்மா யார் என்று எழுத வேண்டும். பரமாத்மாவின் சித்திரம் மற்றும் கிருஷ்ணரின் சித்திரம் பற்றி அடிக்கடி புரிய வைக்க வேண்டும். சொர்க்கம் மற்றும் நரகத்தின் சக்கரம் மிக நன்கு புகழ் பெற்றதாகும். நரகத்தின் சக்கரத்தில் எழுதி வைக்க வேண்டும் -- இது இராவணனின் இராஜ்யம். நரக உலகம் என்று. சொர்க்கத்தின் சக்கரத்தின் மீது எழுதுங்கள் -- இது உயர்வான (சிறப்பான) உலகம். ஆக, காலத்தை எழுத வேண்டும், சொர்க்கம் இவ்வளவு காலம், நரகம் இவ்வளவு காலம். பாருங்கள், உயரும் கலை, இறங்கும் கலையின் சித்திரமும் கூட உள்ளது. ஏனென்றால் கீழே இறங்கும் கலையில் 5000 ஆண்டுகள் மற்றும் உயரும் கலை ஒரு விநாடியில் - ஆக, இது ஒரு ஜம்ப் (உயர தாண்டுவது) ஆகி விட்டது. இந்த முக்கிய விசயம் புரிய வைக்க வேண்டியதாகும். அதன் பிறகு விராட ரூபம். அதில் பிராமணராகிய குடுமி, ஈஸ்வரிய சம்பிரதாயம். பிரம்மா வாயின் மூலமாகப் படைக்கப் பட்ட பிராமணர்களாகிய உங்கள் பிராமண குலம் புகழ் வாய்ந்தது, அனைத்திலும் உத்தமமானது. ஆக, அனைவருக்கும் புரிய வைப்பதற்காக இந்தச் சித்திரங்கள் மிகவும் அவசியம். பலவித தர்மங்களின் மரம் - அதுவும் நன்றாக உள்ளது. குழந்தைகள் சுயதரிசனச் சக்கரதாரி ஆக வேண்டும். அதனால், சக்கரத்தின் ஞானத்தையும் கொடுக்க வேண்டும் -- சக்கரம் எப்படிச் சுற்றுகிறது? பிரம்மா-சரஸ்வதிக்கு ஹீரோ-ஹீரோயின் பார்ட் எப்படி? சிருஷ்டிச் சக்கரத்தின் படமும் பெரியதாக இருக்க வேண்டும். அதிக பட்சமாக ஒன்றரை மணி நேரம் புரொஜக்டர் மூலம் காட்டப்பட வேண்டும். ஏனென்றால் மனிதர்கள் இந்த விசயங்களில் களைத்துப் போகின்றனர். கதையோ எதுவும் இல்லை-- இதுவோ ஞானத்தின் விசயமாகும். முதலில் இதை எப்போது எழுதுகிறீர்களோ, அப்போது உள்ளே வர முடியும். ஆக, காட்டுவதற்காக டிக்கெட் வைக்க வேண்டும். பைசாவின் டிக்கெட் அல்ல. ஆனால் நுழைவுச் சீட்டு. பெரிய-பெரிய மனிதர்களுக்கோ அழைப்பிதழ் கொடுத்து அழைக்க வேண்டும். ஏனென்றால் பெரிய-பெரியவர்களிடம் அவர்களுடைய கருத்தை எழுதி வாங்க வேண்டும். அதிகமான கூட்டத்தில் எப்படி எழுதி வாங்குவீர்கள், எப்படிக் காட்டுவீர்கள்? ஏனென்றால் புரிய வைக்கவும் வேண்டும். அதனால் முதல்-முதலில் பெரிய மனிதர்களை அழைத்து எழுதி வாங்க வேண்டும். பிறகு பொதுவானதாக ஆக்கி அனைவரையும் அழைக்க வேண்டும். கண்காட்சியிலும் கூட இது போல், புரொஜக்டரிலும் இது போல், மேகசினிலும் இந்த நல்ல-நல்ல சித்திரங்களை உருவாக்கி அத்துடன் ஞானத்தையும் அதில் எழுதுங்கள். பிறகு யாருக்காவது அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும். ஹடயோகம் மற்றும் இராஜயோகத்திற்கிடையில் வித்தியாசத் தையும் விளக்கமாக எழுத வேண்டும். ஹடயோகமும் கூட ஒரு விதமான இம்சையாகும். ஏனென்றால் சரீரத்திற்குக் கஷ்டம் கொடுக்கின்றனர். உங்களுடையது அஹிம்சையின் யோகம், மிக சுலபமானது. நடமாடும் போதும் சுற்றிவரும் போதும் பாபாவை நினைவு செய்து கொண்டே இருங்கள். இம்சை செய்பவர்கள் மற்றும் அஹிம்சையாளர்கள்

என்பதையும் வெளிப்படுத்த வேண்டும். அநேகரோ சரீரத்தின் ஆரோக்கியத்திற்காகக் மதச் சடங்குகள் செய்கின்றனர். அதன் மூலம் அவர்கள் ஒன்றும் பரமாத்மாவோடு சந்திப்பதில்லை. ஹடயோகத்தையும் யோகம் எனச் சொல்லி விடுகின்றனர். யோகாஸ்ரமம் உள்ளது இல்லையா? இது பிறகு சகஜ இராஜயோகம். ஈஸ்வரன் கற்றுத் தந்த யோகம். ஆக, இதை மிக நன்றாகப் புரிய வைக்க வேண்டும். யாருடைய புத்தியோகம் நாள் முழுவதும் மற்றவர்களைப் பற்றிய சிந்தனையிலேயே இருக்குமோ, அவர்கள் என்ன புரிய வைக்க முடியும்? யாருடைய புத்தியில் சேவை செய்ய வேண்டும் என்று இருக்கிறதோ, அவர்கள் செய்வார்கள். 8 மணி நேரம் தொழில் செய்தாயிற்று என்றால் பிறகு இந்த வருமானத்தைச் சேமிக்க வேண்டும். அது சரீர சம்மந்தமான வருமானம். இது ஆன்மிக வருமானம். ஆகவே இந்த வருமானத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். யோகத்தில் அதிக அப்பியாசம் செய்ய வேண்டும். அதிகாலை எழுந்து அமர்ந்து பாபாவை மிகுந்த அன்போடு நினைவு செய்ய வேண்டும். யாரை பாபா ஒன்று, இரண்டு நம்பரில் வைக்கிறாரோ, அவர்களும் நினைவு செய்வதில்லை. சொற்பொழிவோ மிக நன்றாகச் செய்கின்றனர். ஆனால் நினைவில் இருப்பதில்லை. ஆத்மாவோ நினைவினால் தான் பறக்கும். ஞானத்தினால் பறப்பதில்லை. டிரான்ஸிலும் நினைவினால் தான் செல்கின்றனர். இதில் ஞானத்தின் எந்த விசயமும் கிடையாது. டிரான்ஸ் என்பது ஒன்றுக்கும் உதவாத விசயமாக ஆகி விடுகிறது. சிலருக்கோ சட்டென்று கிருஷ்ணரின் சாட்சாத்காரம் கிடைத்து விடுகிறது. அநேகப் பெண்குழந்தைகள் எழுதுகின்றனர், பாபா, நாங்கள் உங்களை அறிந்து கொண்டு விட்டோம். அவர்கள் டிரான்ஸில் பிரம்மாவையும் கூடப் பார்க்கின்றனர் மற்றும் பிரேரணையும் கூடக் கிடைக்கின்றது. ஆக, பிறகு அவர்களுக்கு நிச்சயம் ஏற்பட்டு விடுகிறது. யார் பாபாவை ஒரு போதும் பார்த்தது கூட இல்லையோ, அவர்களும் கூட எழுதுகின்றனர் - நாங்கள் பாபாவை மிகவும் நினைவு செய்கிறோம். நாங்கள் உங்களிடம் இருந்து ஆஸ்தியைப் பெற்றே தீர்வோம். தாங்களோ அறிவீர்கள், நாங்கள் நினைவு செய்கிறோம் என்று. எப்போது தாங்கள்..... என்று சொல்லுகின்றோமோ அப்போது சிவபாபாவின் நினைவு தான் வருகிறது. ஆக, பந்தனத்தில் இருக்கும் பெண்குழந்தைகள் அதிகம் நினைவு செய்கின்றனர். அந்த அளவுக்கு முன்னால் இருப்பவர்கள் கூட நினைவு செய்வதில்லை. முதலாவது விஷயம் நினைவினுடையது. பிறகு இராமராஜ்யம் வேண்டும் என்று காந்திஜி சொன்னார். இப்போதோ இராவண இராஜ்யம். இதைப் பற்றி நீங்கள் புரிய வைக்க முடியும். உயரும் கலையையோ பரமாத்மா தான் செய்விக்க முடியும். மற்றவர்களோ ஒருவர் மற்றவரை வீழ்த்திக் கொண்டே இருக்கின்றனர். தேவதைகளும் கூட கீழிறங்கிக் கொண்டே செல்கின்றனர். அவர்கள் சுகத்தில் தான் இருக்கின்றனர் என்றாலும் கலைகள் குறைந்து கொண்டே தான் செல்கின்றன இல்லையா? பேனைப் போல் இறங்கிக் கொண்டே செல்கின்றனர். ஏனென்றால் டிராமாவும் கூட பேனைப் போல் சென்று கொண்டே இருக்கிறது. ஆக, உயரும் கலை ஒருவர் மூலமாகத் தான் ஏற்படு கின்றது. புரிய வைப்பதற்காக புரொஜக்டர் மிகவும் நல்லது. சென்டர்களும் மிகவும் வளர்ச்சியாகிக் கொண்டே போகும். பாபா சொல்கிறார், ஒவ்வொரு பாஷையிலும் ஸ்லைடுகளைத் தயார் செய்து கொண்டே செல்லுங்கள். ஆனால் காரியம் செய்யக் கூடியவர்கள் அது போல் யாரும் இல்லை. பாபா யுக்தியோ சொல்லி விடுகிறார். ஆனால் காரியம் செய்பவர்கள் வேண்டும். அப்போது

சேவை அதிகமாக விருத்தியாகும்.

குழந்தைகள் தங்களின் சகோதர-சகோதரிகள் மீது மிகவும் இரக்கப்பட வேண்டும். பாபா இரக்க மனம் உள்ளவர் இல்லையா? நான் வருவதும் கூட பாரதத்தில் தான். வேறு எந்த இடத்திலும் நான் வருவதில்லை. சிவஜெயந்தியும் பாரதத்தில் தான் கொண்டாடப் படுகிறது. ஆனால் அது பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. கிறிஸ்துவின் ஜெயந்தி கொண்டாடுகின்றனர் என்றால் அவருடைய காரியங்கள் பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் சிவனுடைய காரியத்தைப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அவர் தான் பதீத-பாவனர். பாரதம் பெரியதிலும் பெரிய தீர்த்த ஸ்தலம். கீதையில் கிருஷ்ணர் பெயரைப் போட்டதால் இவ்வளவு பெரிய தீர்த்த ஸ்தலமாகிய பாரதத்தின் மகிமை மறைந்து விட்டுள்ளது. பாருங்கள், முகம்மது கஜினி கோவிலைக் கொள்ளையடித்தார். அவருக்கு இது நம்முடைய பாபாவின் ஆலயம் என்று தெரிந்திருக்குமானால் கொள்ளையடித்திருக்க மாட்டார். அல்லா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்பவர் எனும்போது அவருடைய கோவிலை யார் கொள்ளையடிப்பார்? சிவபாபாவை அறிந்திருப்பார்களானால் ஒரு போதும் கோவிலில் கை வைத்திருக்க மாட்டார்கள். அவர்கள் சிவனுக்குத் தலைவணங்கலாம், ஆனால் அறிந்து கொண்டிருந் தால் ஒரு போதும் கொள்ளையடிக்க மாட்டார்கள். கீதையில் கிருஷ்ணரின் பெயரைப் போட்டதால் மட்டும் இவை அனைத்தும் நடைபெற்றுள்ளன. கீதை குறையுள்ளதாக ஆனதால் பாருங்கள், என்ன நிலை ஆகியுள்ளது! சிவனுடைய பெயர் அவரே கதி சத்கதி அளிக்கும் வள்ளல் என்று இருந்திருந்தால் - இது ஒருவருடைய மகிமையாகும். அவர் இங்கே வரவில்லை என்றால் எப்படி தூய்மை ஆவார்கள்? பாரதத்தை எப்படி சொர்க்கமாக்க முடியும்? இது குப்தமான விசயம் இல்லையா? நாம் துர்கதியில் இருந்தோம் என்பதை அறிந்துள்ளனர். இப்போது இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். ஆனால் (நல்ல கதிக்கு) சென்று கொண்டிருக்கிறீர்கள். குழந்தைகளுக்கு மிகுந்த குஷி இருக்க வேண்டும்- நாம் நமக்காக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே மற்றவர் களுக்கும் வழி காட்டி, பிரஜைகளை உருவாக்க வேண்டும். மிகுந்த முயற்சி செய்ய வேண்டும். மிகவும் சுலபம் தான். தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள். சொர்க்கத்தை நினைவு செய்யுங்கள். இதுவோ நரகம். ஹம் ஸோ என்பதன் அர்த்தத்தையும் கூட பாபா புரிய வைத்துள்ளார். ஹம் ஸோ தேவதா, ஹம் ஸோ சத்திரியர்.....(நாம் தான் தேவதையாக இருந்தோம், பிறகு நாமே தான் சத்திரியராக ஆனோம்). வேறு யாரும் இந்த அனைத்து விசயங்களையும் புரிந்து கொள்ளவில்லை. ஆக, விராட ரூபத்தில் இதைப் புரிய வைக்க வேண்டும் - ஹம் ஸோ தேவதா......... ஆகிறோம். இப்போது நாம் சொர்க்கத்திற்குப் போயே போய் விட்டோம். அநேகர் கேட்கின்றனர், எவ்வளவு சமயம் ஆகும்? பாபா சொல்கிறார், நீங்கள் சொர்க்கத்திற்குப் போகின்ற அளவுக்கு எங்கே இப்போது தயாராகி இருக்கிறீர்கள்? டிராமாவோ உருவாக்கப் பட்டுள்ளது. எவ்வளவுக் கெவ்வளவு ஸ்தாபனை நடைபெற்றுக் கொண்டே இருக்கிறதோ, விநாச ஜுவாலையும் கூட மெது-மெதுவாக அதிகரித்துக் கொண்டே போகிறது. தர்மங்களில் சண்டை ஆரம்பித்துக் கொண்டே போகிறது. முதலில் பிரிவினை இருந்ததில்லை. நீங்கள் அறிவீர்கள், முதலில் ஒரு தேவதா தர்மம் இருந்தது. பாடல் உள்ளது இல்லையா - நீங்கள் கிடைத்து விட்டதால் சொர்க்கத்தின் இராஜ்யத்தை யோகபலத்தால் அடைந்து கொண்டிருக்கிறோம். புஜபலத்தால் யாரும் அடைய முடியாது.

அவர்களிடம் புஜபலம் உள்ளது. ரஷ்யா, அமெரிக்கா தங்களுக்குள் ஒன்றாகி விட்டால் முழு இராஜ்யத்தையும் பெற முடியும். ஆனால் அப்படி நடைபெறாது. எப்போது தேவதை களின் இராஜ்யம் இருக்கிறதோ, அப்போது அங்கே கிறிஸ்தவர், பௌத்தர் இருப்பதில்லை. இப்போது தேவதா தர்மத்தின் ஸ்தாபனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாரதம் அவிநாசிக் கண்டமாகும். பாபாவும் இங்கே வந்துள்ளார் இல்லையா? டிராமாவில் இது போல் தான் உள்ளது - யோகபலத்தால் இராஜ்யம் கிடைக்கிறது. பாரதத்தின் புராதன யோகம் புகழ் பெற்றதாகும். ஆனால் யோகத்தைக் கற்பித்தது யார், மற்றும் எப்படி என்பது அவர்களுக்குத் தெரியாது. கிருஷ்ணரோ யோகம் கற்றுத் தரவில்லை. பரமபிதா பரமாத்மா தான் யோகத்தைக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார். இது புத்தி யிலிருந்து நழுவி விடுகிறது என்றால் இது எவ்வளவு அறியாமையின் விசயமாக உள்ளது! அநேகரோ அறிந்திருந்தும் விட்டு விடுகின்றனர். அதனால் பாபா சொல்கிறார், புத்திசாலிகளைப் பார்க்க வேண்டுமானால் இங்கே பாருங்கள்..... புத்திசாலிகள் ஆஸ்தியைப் பெற்றுக் கொள்கின்றனர். புத்தியற்றவர்கள் விட்டு விடுகின்றனர். சொர்க்கத்தின் ஆஸ்தியை இழந்து விடுகின்றனர். மகா மூடர்கள், மகா அறிவாளிகளைப் பார்க்க வேண்டுமானால் இங்கே பாருங்கள். சொர்க்கத்திற்கு அவர் களும் செல்வார்கள். ஆனால் பிரஜையில் செல்வார்கள். நீங்கள் அறிவீர்கள், சூரியவம்சி, சந்திரவம்சி பிரஜையாக எப்படி ஆகிறார்கள்? பாபாவின் மடி இங்கே கிடைக்கிறது. மூலவதனத்தில் மடியின் கணக்கு கிடையாது. குழந்தை பிறந்ததும் குருவின் மடியில் கொடுக்கின்றனர். குருவின் மடியில் செல்லவில்லை என்றால் துர்கதி அடைவார்கள் என நினைக்கின்றனர். சின்னக் குழந்தைக்குக் கூட குருவை அமர்த்தி விடுகின்றனர். குரு இல்லாமல் கதி இல்லை என்று குருமார் புரிய வைத்துள்ளனர். சரீரம் எப்போது விடுபடும் எனத் தெரியாது. இங்கோ ஜென்மம் எடுத்ததும் பிறகு குருவிடம் சென்று விடுகின்றனர். இங்கே மூவரும் இணைந்துள்ளனர். இது எந்த ஒரு சாஸ்திரத்திலும் எழுதப் பட்டிருக்கவில்லை - அதே தான் தந்தை, ஆசிரியர், குருவின் மடியும் ஆகும். பாபா கேட்டார், சிவபாபாவுக்குத் தந்தை இருக்கிறாரா? ஆம் என்று சொல்கின்றனர். நல்லது, சிவபாபாவுக்கு ஆசிரியர் இருக்கிறாரா? குரு இருக்கிறாரா? இல்லை. தாய்-தந்தை மட்டும் கிடைக்கின்றனர். இது ஆழமான கணக்காகும். பாபா குழந்தைகள் மீதும் குழந்தைகள் பாபா மீதும் பலியாகின்றனர். லௌகீகத்தில் குழந்தைகள் தந்தை மீது பலியாவதில்லை. தந்தை ஆகின்றார். எனவே, இது புரிந்து கொள்வதற்கான விஷயமாகும் - அதாவது பரமாத்மா தந்தையாக, ஆசிரியராக, சத்குருவாக உள்ளார். அவரிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சுயதரிசனச் சக்கரதாரி ஆக வேண்டும். நாம் பிராமணர்கள் உயர்ந்தவர்கள், ஈஸ்வரிய சம்பிரதாயத்தினர் - இந்த நஷாவில் இருக்க வேண்டும்.

2. தனது நேரத்தை பாபாவின் நினைவில் இருந்து பயனுள்ளதாக ஆக்க

வேண்டும். ஆன்மிக சேவையில் பிஸியாக இருக்க வேண்டும். பாபா மீது முழுமையாக பலியாக வேண்டும்.

வரதானம் : ஏக்ரஸ் ஸ்திதியின் ஆசனத்தின் மீது மனம்-புத்தியை அமர்த்தி வைக்கக் கூடிய உண்மையான தபஸ்வி ஆகுக.

தபஸ்வி என்றால் சதா ஆசனதாரியாக இருப்பவர்கள். அவர்கள் ஏதேனும் ஒரு ஆசனத்தின் மீது அமர்ந்து தபஸ்யா செய்வார்கள். தபஸ்வி குழந்தைகள் உங்களது ஆசனம் -- ஏக்ரஸ் ஸ்திதி, ஃபரிஸ்தா ஸ்திதி. இந்த சிரேஷ்ட ஸ்திதியின் ஆசனத்தின் மீது நிலைத்திருந்து தபஸ்யா செய்யுங்கள். எப்படி ஸ்தூல ஆசனத்தின் மீது சரீரம் அமர்கின்றதோ, அது போல் சிரேஷ்ட ஸ்திதி என்ற ஆசனத்தின் மீது மனம்-புத்தியை அமர்த்தி வையுங்கள் மற்றும் எவ்வளவு நேரம் விரும்புகிறீர்களோ, ஆசனத்தின் மீது அமர்ந்து விடுங்கள். இச்சமயம் சிரேஷ்ட ஸ்திதியின் ஆசனத்தின் மீது அமர்பவர்களுக்கு வருங்காலத்தில் இராஜ்ய சிம்மாசனம் கிடைக்கும்.

சுலோகன்: ஸ்லோகன் : மற்றவர்களின் சிந்தனைகளைத் தன்னுடைய சிந்தனைகளோடு சேர்த்து அனைவருக்கும் மதிப்பளிப்பது தான் மதிப்பிற்குரியவர் ஆவதற்கான சாதனமாகும்.